## பிற சபை கிறிஸ்தவர்களை பகையுணர்வோடு பழகுவது சரியா?

**நம் கத்தோலிக்க மக்களில் பலர் புரோடெஸ்டன் கிறிஸ்தவர்களைக் கண்டால் பகையுணர்வோடும் வேணாட வெறுப்போடும் பழகுகிறார்கள். இது சரியா?**

**- H. வின்சென்ட்**

புரோட்டெஸ்டன் கிறிஸ்தவர்களால் இயேசு நிறுவிய திருச்சபை பிளவுப்பட்டு, இன்று பல சபைகளாக பிரிந்து கிடக்கிறது என்கிற பரிதாப உண்மை நிலையை மறுக்க இயலாது. திருச்சபையில் ஒரு காலத்தில் விரும்பத்தகாத சில நிகழ்ச்சிகள் நடந்தது உண்மை. 1054 இல் நிகழ்ந்த அதிகார மோதலின் காரணமாக முதன் முதல் திருச்சபை இரண்டாக உடைந்தது. அடுத்த 16 ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூத்தர் போன்ற வேறு சிலரும் திருச்சபைக்கு எதிராக எழுந்ததன் காரணமாக திருச்சபை மேலும் பிளவுப்பட்டது. அன்று அவசரம் எது அபாயம் எது என்று அன்று எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர். அதன் விளைவு பிளவு.

எது எப்படியிருந்தாலும் கத்தோலிக்களாகிய நாம், நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக நடக்கட்டும் என்னும் பெருந்தன்மை கொண்டவர்களாக இருக்க வேண்டும், பழக வேண்டும். இதுதான் இரண்டாம் வத்திக்கான சங்கம் அளிக்கும் போதனை (திருச்சபை எண் 15). பிரிந்து சென்ற கிறிஸ்தவர்களையும் நாம் சகோதர சகோதரிகளாகத்தான் கருத வேண்டும், உறவாட வேண்டும். அவர்கள் மூலமாகவும் தூய ஆவி செயல்பட இதை செயல்படுத்துகிறார். மேலும், நம்பிக்கை, வழிபாடு அருள்சாதனங்கள் மூலம் நமக்கும் அவர்களுக்கும் தொடர்புண்டு. இதை மறுக்க இயலாது. இதை கத்தோலிக்கர்களாகிய நாம் ஏற்க வேண்டும்.

பிரிந்து கிடக்கும் திருச்சபை ஒருநாள் ஒன்றுபடும். நம்மில் கத்தோலிக்கர் என்கிற கத்தோலிக்கப் பற்று இருக்கலாம். ஆனால், அது வெறியாக மாறிவிடக்கூடாது. வெறி உறவை முறிக்கும். வெறி வளர்ச்சியைக் கெடுக்கும். கத்தோலிக்கர் வெறிக்குரியவர் அல்லர்.

பிரிந்த சகோதரர்களை வெறுக்கும் கத்தோலிக்கர் தூய ஆவியின் செயல்பாட்டுக்கு முரணாக வாழ்கிறார்கள் என்றே கூற வேண்டும். திருமுழுக்கால் சகோதர உறவைக் கொண்டிருக்கும் நாம் பிரிந்த சகோதரர்களுடன் உறவை கொள்ளவும், கலந்துரையாடல்கள் மேற்கொள்ளவும் நினைவூட்டுகிறோம். திருத்தந்தை பிரான்சிஸ் உறவுக்கு பாலம் அமைப்பவர். அவரது செயலையும் நடவடிக்கைகளையும் பிரிந்த சகோதரர்கள் கவனித்து வருகிறார்கள். எனவே, மனமாற்றம் ஏற்படும் காலம் தொலைவில் இல்லை. கத்தோலிக்கர் அன்னை மரியாவின் நிழலில் வாழ்பவர்கள். எனவே, மனதில் வேறுபாடுகள் கொள்ளாமல், அன்பே பிரதானம் எனும் ஆழ்ந்த கொள்கையில் அனைவரையும் அரவணைத்து வாழ வேண்டும். பிரிந்த சகோதரர்கள் நமக்கு ஒருபோதும் எதிரிகள் அல்ல. அவர்களுடைய போதனை, கொள்கை நமக்கு முரண்பாடானதாக இருக்கலாம். ஆனால், கிறிஸ்துவில் நாம் சகோதரர்கள். இன்று அவர்களுடனான கலந்துரையாடல் மிக மிக இன்றியமையாதது. 'எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக' (யோவான்: 17:21) எனும் இயேசுவின் கனவு நனவாக வேண்டுமாயின் நமது ஒத்துழைப்பையும் இயேசு எதிர்பார்க்கிறார். **- ஆர்.கே.**

# உலக மக்களின் மதிப்பில் முதலிடம் பெற்றுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்



உலகின் அனைத்து அரசியல் தலைவர்களைவிட, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மக்களிடையே அதிக நன்மதிப்பை பெற்றுள்ளார் என்று வெளியான ஒரு கருத்துக்கணிப்பு கூறியுள்ளது.

'வின்/கலப் இன்டர்நேசனல்' என்ற ஒரு கருத்துக்கணிப்பு நிறுவனம், 64 நாடுகளில் 1000 க்கும் அதிகமான மக்களிடையே மேற்கொண்ட ஒரு கருத்துக்கணிப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மதம் என்ற எல்லையைத் தாண்டி, அனைத்து மதத்தினரிடையிலும், மத நம்பிக்கையற்றவர் நடுவிலும் நன்மதிப்பு பெற்றுள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மதம் என்ற எல்லையைக் கடந்து, பெரும்பான்மையான உலக மக்களிடையே நேர்மறையான தாக்கங்களை உருவாக்கியுள்ளார் என்பதை அறிய முடிகிறது என்று, 'வின்/கலப் இன்டர்நேசனல்' கருத்துக்கணிப்பு நிறுவனத்தின் தலைவர், ஜீன் மார்க் லேஜர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

கத்தோலிக்க மக்கள் மத்தியில், 85 விழுக்காட்டினர், திருத்தந்தை மீது உயர்ந்த மதிப்பு வைத்துள்ளனர் என்றும், அதற்கு அடுத்தபடியாக, யூதர்கள் மத்தியில், 65 விழுக்காட்டினர் அவர் மீது உயர்ந்த மதிப்பு கொண்டுள்ளனர் என்றும் இக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

கருத்துக்கணிப்பு நடத்தப்பட்ட 64 நாடுகளில், பிலிப்பைன்ஸ் நாட்டில், 93 விழுக்காட்டினர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை தாங்கள் மிகவும் மதிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை 'வின்/கலப் இன்டர்நேசனல்' நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்புகளில் உயர்ந்த நிலைகளை வகித்து வந்த அமெரிக்க அரசுத் தலைவர் ஒபாமா, ஜெர்மன் அரசுத் தலைவர் ஆஞ்செலா மெர்க்கெல் போன்ற அனைத்துத் தலைவர்களையும் விட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மக்கள் கொண்டுள்ள மதிப்பில் முதலிடம் பெறுகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரசல் தாக்குதல்கள், திருத்தந்தை கடும் கண்டனம்

பெல்ஜியம் நாட்டு தலைநகர் பிரசல், அதிகத் துன்பங்களை வருவிக்கும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதற்குத் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

பிரசல் சவிந்தம் விமான நிலையத்திலும், பாதள இரயில் நிலையங்களிலும் இடம்பெற்றுள்ள குண்டுவெடிப்புத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் பெல்ஜியம் நாட்டு மக்களுக்குத் தனது செபங்களையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் தெரிவித்துள்ள திருத்தந்தை, அமைதிக்காக இறைவனிடம் செபிப்பதாகக் கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இச்செய்திகள் கொண்ட தந்திச் செய்தியை திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், திருத்தந்தையின் பெயரில், பிரசல் பேராயர் ஜோசிப் டே கெசேல் அவர்களுக்கு அனுப்புயுள்ளார்.

மேலும், மரணத்தை வருவிக்கும் இப்பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதற்குத் தங்களின் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் பெல்ஜியம் ஆயர்கள். இதில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தங்களின் செபத்துடன்கூடிய ஒருமைப்பாட்டு உணர்வைத் தெரிவித்துள்ள ஆயர்கள், இத்தாக்குதல்களுக்குத் தீர்வு காண்பதற்கு, தேசிய அளவில் ஒற்றுமையுடன் செயல்படுமாறு கூறியுள்ளனர்.

சவிந்தம் விமான நிலையக் குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும், ஆயிரக்கணக்கான பயணிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களை ஆழ்ந்த



கவலையில் ஆழ்த்திருப்பதாகவும் பெல்ஜியம் ஆயர்களின் கண்டனம் அறிக்கை கூறுகிறது.

இந்தப் பயங்கார குண்டுவெடி தாக்குதல்களில் பலியானவர்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளதாகவும், விமான நிலையத்தில் 81 பேரும், இரயில் நிலையத்தில் 55 பேரும் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரிஸ் தாக்குதலில் தொடர்புடைய முக்கிய தீவிரவாதி, கடந்த வாரம் பிரசல் நகரில் கைது செய்யப்பட்டதற்குப் பதிலடியாக, இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிக்காலம் என்று சந்தேகிப்படுகின்றது.

## என் ஆயன் என் ஆண்டவர்; இனி எனக்கு என்னக் குறைவு

நான் பிறந்த வாழ்ந்து கல்வி கற்றது திருமணம் புரிந்தது எல்லாம் தோட்டப்புறச் சூழலில்தான் அமைந்திருந்தது. நாங்கள் வாழ்ந்த தோட்டத்தில் சுமார் நூறு மாடுகள் இருந்தன. இந்த நூறு மாடுகளும் இருசன் என்பவர்தான் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வார். ஒவ்வொரு மாட்டுக்கும் ஒரு பெயர் வைத்திருப்பார்கள். அத்தனை மாட்டின் பெயரும் இவருக்கு அத்துப்படி. மத்தியம் 12.00 மணிக்கு மாட்டு கொட்டகை பக்கம் வந்து ஒவ்வொரு மாட்டின் பெயரைச்சொல்லிக் கூவி அழைப்பார். அவைகளும் இவரின் குரல் கேட்டு ஓடிவரும். இவர் முன்னே செல்ல அனைத்து மாடுகளும் இவர் பின்னே செல்லும் நல்ல மேய்ச்சலுக்கு புற்கள் உள்ள இடமாக அழைத்துச் செல்வார். பின் தண்ணீர் குடிக்க தண்ணீர் உள்ள தண்ணீர் குட்டைகளுக்கோ, ஆற்றங்கரைக்கோ அழைத்துச் செல்வார். பின் மாலை 5.00 மணிக்கு கொட்டகைக்கு அழைத்து வந்துவிடுவார். அப்படியேதும் மாடு காணாமல் போயிருந்தால் அவரே மேய்ச்சலுக்கு சென்று பாதையிலே சென்று காணாமல்போன மாட்டின் பெயரை உச்சரித்த அழைத்தாரானால் உடனே எங்கிருந்தாலும் மறுமொழியாக "மா ஆஆஆஆ...மா ஆஆஆஆ..." என ஒலி எழுப்பிக்கொண்டே அவரை நோக்கி ஓடிவரும். அன்று நடந்த சம்வத்தை இன்று நினைவு கூர்ந்து பார்க்கும்பொழுது "எனது ஆடுகள் எனது குரலுக்கு செவி கொடுக்கிறேன்" எனும் வசனம் எத்துணை பொருத்தம். ஆக, இந்தச் சம்பவத்தில் இருசன் எனும் எஜமான் குரலை மாடுகள் நன்கு அறிந்துள்ளது போல நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார்.

இன்றைய முதல் வாசகத்தில் அந்தியோக்கியாவில் இயேசுவைப் பின்பிற்றியவர்கள் முதல் முறையாக கிறிஸ்தவர்களென அழைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்களாகிய நாம் அவரின் ஆடுகள்; அவரின் வழி செல்ல நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இரண்டாம் வாசகத்தில் திருவெளிப்பாட்டிலே இன்றைய வாசகத்தின் கடைசி வசனத்தில் "ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி அவர்களை மேய்க்கும்; வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும். கடவுள் அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்" என வாசிக்கிறோம். நல்ல மேய்ப்பன் நல்ல வழியைத்தான் காண்பிப்பார். அர்ப்பண உணர்வோடு நம்மை வழி நடத்திச் செல்வார். காணாமல் போன ஆட்டைத் தேடி செல்வார். இயேசுவின் ஆடுகளாகி நாம் அவரின் குரலைக் கேட்க ஆர்வத்தோடு இறைவார்த்தையை வாசிப்போம். பிரசங்கத்தை கவனமுடன் செவிமடுப்போம். **- ஆ.வி.டேவிட்**

## பாஸ்கா 4 ஆம் ஞாயிறு

**தி.பணி: 13: 14,43-52**
**திபா. 100:1-3, 5**
**தி.வெ. 7:14-17**
**யோவான்: 10:27-30**

**கவனத்திற்கு**

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 3**
**வாரநாள் வாசகம்: ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை 17-4-2016 : பாஸ்கா காலம்**